# தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு

(பதிவு எண். 158/சி.பி.டி.- அங்கீகாரம் பெற்றது - இணைப்பு : CITU & EEFI)
E-mail : coteecitu@gmail.com

27, மசூதி தெரு
சேப்பாக்கம்
சென்னை - 600 005
போன் : 2854 8529
பேக்ஸ் : 2851 6574

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| **எஸ்.எஸ்.சுப்ரமணியன்** | **எஸ்.இராஜேந்திரன்** | **எம்.வெங்கடேசன்** |



TANGEDCO, SECRETARIAT BRANCH
TAPAL SECTION
06 JAN 2018
CHENNAI-600 002


நாள் 06.01.2018

**1958-ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகள்**
**விதி 59(1)-ன் கீழ்**
**படிவம் " ஓ "**
**(Form "O")**

**பொதுப் பயன் துறையில் வேலை நிறுத்தம் செய்வதற்காக தொழிற் சங்கத்தால் வழங்கப்படுகின்ற வேலை நிறுத்த அறிவிப்பு படிவம்**

- தொழிற்சங்கத்தின் பெயர் : தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு (Central Organisation of Tamil Nadu Electricity Employees)

வேலைநிறுத்த அறிக்கை தர தொழிலாளர்களால் அதிகாரம் பெற்றுள்ள எட்டு பிரதிநிதிகள்

1. எஸ். எஸ். சுப்பிரமணியன் — தலைவர்
2. எஸ். இராஜேந்திரன் — பொதுச் செயலாளர்
3. எம். வெங்கடேசன் — பொருளாளர்
4. கே. அருள்செல்வன் — து.பொ.செயலாளர்
5. டி. ஜெயசங்கர் — து.பொ.செயலாளர்
6. ஆர்.ரவிக்குமார் — செயலாளர்
7. அ.பழனி — செயலாளர்

- முகவரி
27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 5.

- வேலை நிறுத்த அறிவிப்பு தரும் நாள் : 06 ஜனவரி 2018

பெறுநர் (நிர்வாகம்) : செயலாளர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
144, அண்ணாசாலை

ஐயா,

1947ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 22(1)ன் படி வேலை நிறுத்த அறிவிப்பினை இதன் மூலம் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். சட்டப்பிரிவு 22(1)ன்படி (வேலை நிறுத்தம்) 2018 ஜனவரி 23 அன்று வேலை நிறுத்தம் செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.வேலை நிறுத்தம் 23.01.2018 காலை 6.00 மணிக்கு துவங்கி 24.01.2018 காலை 6.00 மணி வரையில் நடைபெறும்.

1958ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகளில் விதிஎண் 59-ன் கீழ் வேலை நிறுத்தத்திற்கு தேவைப்படுகின்ற அடிப்படையான விவரங்கள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

தங்களின் உண்மையுள்ள

<u>தொழிற் சங்கம் அளித்துள்ள அதிகாரத்தின்படி</u>
<u>தொழிற்சங்க எட்டு பிரதிநிதிகளின் கையொப்பங்கள்</u>

1. எஸ். எஸ். சுப்பிரமணியன் : [signature]

2. எஸ். இராஜேந்திரன் : [signature]

3. எம். வெங்கடேசன் : [signature]

4. கே. அருள்செல்வன் : [signature]

5. டி. ஜெயசங்கர் : [signature]

6. ஆர். ரவிக்குமார் : [signature]

7. அ. பழனி : [signature]

பெறுநர்

1. செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரியம், 800, அண்ணாசாலை, சென்னை - 600 002.
2. செயலாளர், தொழிலாளர் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை 600 009.
3. தொழிலாளர் ஆணையர், தேனாம்பேட்டை, சென்னை 600 006.

இணைப்பு
வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான கோரிக்கை பட்டியல்.

# இணைப்பு

(1958-ம் ஆண்டு தொழிற் தகராறு விதிகளில் எண் 59-ன் கீழ்)

(அ) தகராறுகளுக்கான கட்சிக் காரர்கள் : 1)தொழிலாளர் தரப்பு
பொதுச் செயலாளர்
தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு
27,மசூதி தெரு, சேப்பாக்கம் ,
சென்னை- 600 005.

: 2) நிர்வாகத் தரப்பு
செயலாளர்
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும்
பகிர்மான கழகம்
144, அண்ணாசாலை
சென்னை-2.

(ஆ) தொழிற் தகராறுகளின் தன்மை மற்றும் கோரிக்கைகள் : மின் வாரிய ஊழியர்களுக்கு 01.12.2015 முதல் ஊதிய உயர்வு வழங்கி இருக்க வேண்டும். அதற்கான பேச்சுவார்த்தையும் வேகப்படுத்தி ஒப்பந்த கண்டிருக்க வேண்டும். பேச்சுவார்த்தையில் வீணான காலதாமதத்தை கடைப்பிடித்து 25 மாதங்கள் கடந்த பின்பும் ஒப்பந்தம் காணாதது நிர்வாகத்தின் அணுகு முறையால் மட்டுமே ஏற்பட்டது.

01.12.2015 முதல் மின் வாரிய ஊழியர்களுக்கு ஊதிய உயர்வும் நிலுவைத் தொகையும் வழங்க மறுத்து வருவதால் பல்லாயிரக்கணக்கான ஊழியர்களும், அலுவலகர்களும், பொறியாளர்களும் பாதிக்கப் பட்டுள்ளார்கள்.

மின் வாரியத்தில் 10,000-க்கும் மேற்பட்ட களஉதவியாளர் பதவியும், கம்பியாளர் பதவியும் காலியாக உள்ளது. காலிப் பணியிடங்களை நிரப்பாத காரணத்தால் மின் விபத்தும் உயிர்யிழப்பும் தினந்தோறும் ஏற்படுகிறது.

அவ்வாறு காலிப்பணியிடங்களை நிரப்புகின்ற போது மின் வாரியத்தில் பல ஆண்டுகளாக பணியாற்றி முன் அனுபவம் உள்ள ஒப்பந்த ஊழியர்களை அடையாளம் கண்டும் அதே போல தொழிற்கல்வி (ITI) பயின்றவர்களையும் சம எண்ணிக்கையில் நிரப்பிட வேண்டும்.

01.04.2003-க்கு பின்பு மின் வாரிய பணியில் சேர்ந்த அனைவருக்கும் பழைய பென்சன் வழங்க வழங்கிட வேண்டும்.

(இ) பாதிக்கப்படுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் விவரம் :

மின்சார வாரியத்தில் பணியாற்றும் 72,000-க்கும் மேற்பட்ட நிரந்தர தொழிலாளர்களும், (பொறியாளர்கள், அதிகாரிகள் உட்பட) 10,000-க்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களும், 6,000-க்கும் பகுதிநேர ஊழியர்களும் நேரிடையாக பாதிக்கிறார்கள். ஊழியர் பற்றாக்குறை காரணமாக 2 கோடியே 72 லட்சத்திற்கும் மேற்பட்ட மின் நுகர்வோர்களுக்கு தடையில்லா மின்சாரத்தை வழங்க இயலாத சூழல் ஏற்படுகிறது.

(ஈ) தொழிற்தகராறுகளை தீர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சிகள் :

மின் வாரியத்தால் அமைக்கப்பட்ட ஊதிய உயர்வு பேச்சுவார்த்தைக்குழு நான்கு கட்ட பேச்சுவார்தையை தொழிற்சங்கங்களோடு நடத்தியும் எங்களது கோரிக்கையான நிலுவைத் தொகையோடு ஊதிய உயர்வு, காலிப்பணியிடங்கள் நிரப்புதல், ஒப்பந்த ஊழியரை அடையாளம் காணுதல், களப்பிரிவு, கணக்கீட்டுப்பிரிவு, கணக்குப் பிரிவு, பண்டகசாலை பிரிவு போன்ற பிரிவுகளில் போதிய பணியாளர்களை நியமிக்காமல் வேலைப்பளுவை உயர்த்தியதை கைவிடக் கோருவது போன்ற கோரிக்கைகளில் மின் வாரியம் ஒரு முடிவை எட்டவில்லை.

பலகட்ட பேச்சுவார்த்தையும் கோரிக்கைகளை முன் வைத்து தீர்வு காண்பதற்காக மாநிலம் தழுவிய உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், பெருந்திரள் தர்ணா, காத்திருப்பு போராட்டம், என பல போராட்டங்கள் நடத்தியும் மின் வாரியமும், தமிழக அரசும் முடிவெடுக்காத காரணத்தால் எங்களது தொழிற்சங்கம் நடத்திய இயக்கங்களுக்கு ஏதும் பலன் அளிக்காததால் இந்த வேலை நிறுத்தத்தை நோக்கி செல்ல வேண்டியுள்ளது.

பொதுச் செயலாளர்